செந்துறையில் பயணிகள் தங்கும் விடுதி.

* 24 வினா.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

மேலூர் வட்டம் செந்துறையில் பயணிகள் தங்கும் விடுதி ஒன்று அமைப்பதற்கான செயற்குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை. செந்துறையில் பயணிகள் தங்கும் விடுதி ஒன்றைக் கட்டும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : ஒரு பயணிகள் விடுதியை அமைக்க வேண்டுமென்றால் என்னென்ன காரணங்களைக் கொண்டு அரசு அதை அமைக்கிறது? அந்தக் காரணங்கள் இந்த ஊரைப் பொறுத்தமட்டில் சரியாக இல்லை என்று அரசு கருதுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த ஊருக்கு அருகாமை யில் மேலூர், நத்தம், கொட்டம்பட்டி இவைகளில் ஏற்கனவே பயணிகள் விடுதிகள் இருக்கின்றன. அங்கிருந்து ஒரு மணி நேரம் பயணம் செய்தால் மதுரை செல்ல முடியும். அங்கு செல்கிற பயணிகள் மதுரை போன்ற இடங்களில் தங்கிக் கொள்ளலாம் என்று கருதுகிறார்கள். ஆகவே, இந்த இடத்தில் பயணிகள் விடுதி அவசியமில்லை என்று கருதப்படுகிறது.

திரு. மு. ச. சிவசாமி : டவுன் பஞ்சாயத்துக்கள் ஒவ்வொன்றி லும் ஒவ்வொரு பயணிகள் விடுதி கட்ட உத்தேசமுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 25, 26 தள்ளி வைக்கப்படுகின்றன.

City Compensatory Allowance for aided school teachers

* 27 Q.—THIRU K. M. RAMASWAMI GOUNDER: Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(a) Whether any representation has been received from aided school teachers for the grant of City Compensatory Allowance: and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம், ஐயா.

(இ) சென்னை மாநகரின் எல்லைகளுக்குள்ளும், சென்னை மாநகரை அடுத்துள்ள சில பகுதிகளிலும், மதுரை நகரின் நகராட்சி எல்லைகளுக்குள்ளும் மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு, நகர ஈட்டுப்படித் திட்டத்தை 1—3—1968 முதற் கொண்டு அரசாங்கம் நீட்டித்துள்ளது. மாநில அரசாங்கப் பணி யாளர்களுக்கு எந்தச் சம்பள வரம்புவரை நகர ஈட்டுப்படி வழங்கப்படுகிறதோ அதே வரம்புவரை மேற்குறிப்பிட்ட ஆசிரியர் களுக்கும் நகர ஈட்டுப்படி வழங்கப்படும்.